**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி.**

முன்னிலை : திருமதி. V.R.லதா, M.A., B.L.,
முதன்மை மாவட்ட நீதிபதி, கிருஷ்ணகிரி.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.27/2025**

**[CNR.No,TNKI01-000247-2025]**

மதியழகன்

... வாதி

/ எதிராக/

1. தமிழ்செல்வி
2. ரவி

... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்னர் 05.03.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பரமேஸ்வரன், அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பச்சையப்பன் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்யாததாலும், 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் இருவரும் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசலீனை செய்தும். இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன்பு பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

தாவா சொத்தில் வாதிக்குண்டான உரிமையை விளம்புகை செய்யக் கோரியும் அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிக்கு பிரதிவாதிகள் ஒப்படைக்க வேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:-

i] தாவா சொத்து பெண்டறஅள்ளி-2 கிராமத்தில் அமைந்துள்ளது. பிரதிவாதிகள் கணவன் மனைவி ஆவார்கள். ஆதியில் தாவா சொத்தை ஒரு ரூபாவதி என்பவரிடமிருந்து 1-ம் பிரதிவாதி கடந்த 28.01.2009-ம் ஆண்டு காலி மனை நிலமாக கிரையம் பெற்ற சொத்தாகும். மேற்படி தாவா சொத்தின் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி ஆர்.சி.சி. வீடு கட்டி அனுபவம் செய்து வந்த நிலையில், மேற்படி தாவா சொத்தை 1ம் பிரதிவாதி வாதியின் முன்பாத்தியஸ்தரான கோகுலகண்ணன் என்பவருக்கு கடந்த 11.01.2012 தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவர் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் அவரது பெயரில் செலுத்தி அனுபவம் செய்து வந்ததாகவும், கிரையப் பத்திரம் பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.108/2012 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி தாவா சொத்தை மேற்படி கோகுலகண்ணனிடம் இருந்து கடந்த 17.04.2017 தேதியில் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி கிரையப் பத்திரம் பாரூர் சார்பதிவாளர்

அலுவலகத்தில் ஆவண எண்.367/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

ii] மேலும் தாவா சொத்தை வாதி கிரையம் பெற்ற தேதியிலேயே சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்து வந்தும், தாவா சொத்திற்கு வாதி தன் பெயரில் பட்டா பெற்றும் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதி பெயரில் வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் செலுத்தியும் அனுபவம் செய்து வந்துள்ளார். இந்நிலையில், தாவா சொத்தில் உள்ள வீட்டின் முன் பகுதியிலுள்ள முகப்பை இடித்து விட்டு புதிதாக இரண்டு கடைகள் கட்ட வாதி கடந்த 22.10.2019ம் தேதியில் ஏற்பாடு செய்தபோது வழக்கு சொத்தை பிரதிவாதிகள் வாதியின் முன்பாத்தியஸ்தரான கோகுலகண்ணனுக்கு கடந்த 2012ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்ததாகவும், தாவா சொத்தை வாதி கிரையம் பெறுவதற்கு முன்பு மேற்படி கோகுலகண்ணனை அணுகி பிரதிவாதிகள் தங்களுக்கே மீண்டும் கிரையம் செய்து கொடுக்க கேட்டதற்கு அதனை கோகுலகணண்ணன் மறுத்து விட்டதாகவும், தாவா சொத்தில் உள்ள வீட்டை எவ்வித மாறுதலும் செய்யாமல் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்குமாறு வாதியிடம் பிரதிவாதிகள் கேட்டதாகவும், வாதி தாவா சொத்தை விற்பனை செய்யும் எண்ணம் இல்லை என பிரதிவாதிகளிடம் கூறியதற்கு வாதி வெளியூரிலிருந்து வந்து பிரதிவாதிகள் ஊரில் எப்படி வாதி கடை வைத்து விடுவாய் என கடந்த 22.10.2019 தேதியில் பௌரசம் கூறியதாகவும், அப்போது வாதி அருகிலிருந்தவர்களிடம்

கூறி பிரதிவாதிகளின் செய்கையை சாதூரியமாக தடை செய்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iii] இருப்பினும், பிரதிவாதிகள் அங்கிருந்து செல்லும்போது வாதி கடை கட்டுவதை தடை செய்யாமல் விடமாட்டோம் என பௌரசம் கூறிச் சென்றதாகவும், பின்னிட்டு 1–ம் பிரதிவாதி கடந்த 10.11.2019 தேதியில் வாதி தாவா சொத்தில் வேலை செய்வதற்காக ஆட்களை அழைத்து சென்று வேலை செய்தபோது தடுத்ததால் வாதி பாரூர் காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்து அதில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் உள்ளூர் வாசிகள் என்பதால் வாதி நாமக்கல்லிருந்து தாவா சொத்தை அனுபவம் செய்வதாலும் பிரதிவாதிகளின் செய்கையை நீதிமன்ற உத்தரவின்றி தடை செய்ய முடியாது என்பதால் தான் வாதி போச்சம்பள்ளி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.74/2019 என வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் வாதி ஊரில் இல்லாத நேரம் பார்த்து பிரதிவாதிகள் கடந்த 10.01.2020 தேதியில் வாதியின் வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி நுழைந்து வாதியின் வீட்டை ஆக்கிரமிப்பு செய்து விட்டதாகவும், அது குறித்து வாதியின் மனைவி பாரூர் காவல் நிலையத்திற்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் மேற்படி போச்சம்பள்ளி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கினை பொருத்து மேற்கொண்டு தொடர்ந்து அதே பரிகாரத்திற்காக நடத்த முடியாது என்பதாலும் தாவா சொத்திலிருந்து

பிரதிவாதிகளை சட்டப்படியாக வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை வாதிக்கு ஏற்பட்டுள்ளதால் போச்சம்பள்ளி மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த அசல் வழக்கு எண்.74/2019 IA.No.3/2020 என அதே வழக்குமூலத்தில் புதியதாக வழக்கு தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு IA.No.3/2020ல் கடந்த 16.12.2024 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மேற்படி உத்தரவு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் புதிய வழக்கு தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் வாதியால் இந்த தாவானது தாவா சொத்துக்கள் முழுவதும் வாதிக்கே பாத்தியப்பட்டது என விளம்புகை கோரியும் மற்றும் தாவா சொத்தினை வாதிக்கு சுவாதீனம் வழங்க செயலுறுத்துக் கட்டளை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3] 1, 2 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.**

4. வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரை விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. **இவ்வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) வாதி கோரியுள்ளவாறு விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதும்,

2) வாதி கோரும் சுவாதீனம் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதும்,

3) வாதி அடையத்தக்க வேறு இதர பரிகாரங்கள் என்ன என்பதும் ஆகும்?

6. <u>**பிரச்சினைகளுக்கான தீர்வு :**</u> வா.சா.1 தனது பிரமாண வாக்குமூலத்தில், தாவா சொத்து பெண்டறஅள்ளி–2 கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், பிரதிவாதிகள் கணவன் மனைவி ஆவார்கள். ஆதியில் தாவா சொத்தை ஒரு ரூபாவதி என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கடந்த 28.01.2009 ம் ஆண்டு காலி மனை நிலமாக கிரையம் பெற்ற சொத்து என்றும், மேற்படி தாவா சொத்தின் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி ஆர்.சி.சி. வீடு கட்டி அனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி தாவா சொத்தை 1ம் பிரதிவாதி வாதியின் முன்பாத்தியஸ்தரான கோகுலகண்ணன் என்பவருக்கு கடந்த 11.01.2012 தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரையப் பத்திரம் பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.108/2012 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற கோகுலகண்ணன் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரியும், மின் கட்டணமும் அவரது பெயரில் செலுத்தி அனுபவம் செய்து வந்ததாக வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

7. இந்நிலையில் வாதி தாவா சொத்தை கோகுலகண்ணனிடம் இருந்து கடந்த 17.04.2017 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்பதும்

கிரையப் பத்திரம் பாரூர் சார்பதிவளார் அலுவலகத்தில் ஆவண எண் 367/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் தாவா சொத்தை வாதி கிரையம் பெற்ற தேதியிலேயே சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்பதும், தாவா சொத்திற்கு வாதி பெயரில் பட்டா பெற்றும், தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதி பெயரில் வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வந்தார் என்பதும் வாதி தரப்பில் கூறப்பட்ட நிகழ்வுகள் நம்பத்தகுந்ததாக இருப்பது இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு வருகிறது. மேலும் வாதி தாவா சொத்தில் உள்ள வீட்டின் முன் பகுதியிலுள்ள முகப்பை இடித்து விட்டு புதியதாக இரண்டு கடைகள் கட்ட கடந்த 22.10.2019ம் தேதியில் ஏற்பாடு செய்தபோது வழக்கு சொத்தை பிரதிவாதிகள் வாதியின் முன்பாத்தியஸ்தரான கோகுலகண்ணனுக்கு கடந்த 2012ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்ததாகவும், தாவா சொத்தை வாதி கிரையம் பெறுவதற்கு முன்பு மேற்படி கோகுலகண்ணனை அணுகி பிரதிவாதிகள் அவர்களுக்கே மீண்டும் கிரையம் செய்து கொடுக்க கேட்டதாகவும், அதனை கோகுலகண்ணன் மறுத்து விட்டதாகவும், எனவே தாவா சொத்தில் உள்ள வீட்டை எவ்வித மாறுதலும் செய்யாமல் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்குமாறு வாதியிடம் பிரதிவாதிகள் கேட்டுள்ளதாகவும், மேற்படி தாவா சொத்தை விற்பனை செய்யும் எண்ணம் வாதிக்கு இல்லை என பிரதிவாதிகளிடம் வாதி கூறியதற்கு வாதியை வெளியூரிலிருந்து வந்து பிரதிவாதிகள் ஊரில் எப்படி கடை வைத்து விடுவாய் என பார்ப்பதாக

கடந்த 22.10.2019 தேதியில் பௌரசம் கூறியதில் வாதி அருகிலிருந்தவர்களிடம் இதைப்பற்றி கூறி பிரதிவாதிகளின் செய்கையை வாதி சாதூரியமாக தடை செய்துள்ளார். இருப்பினும் பிரதிவாதிகள் அங்கிருந்து செல்லும்போது வாதி கடை கட்டுவதை தடை செய்யாமல் விடமாட்டோம் என பௌரசம் கூறிச் சென்றதாக வாதியின் பிரமாண வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது.

8. மேலும், 1ம் பிரதிவாதி கடந்த 10.11.2019 தேதியில் வாதியின் தாவா சொத்தில் வாதி வேலை செய்வதற்காக ஆட்களை அழைத்து சென்று வேலை செய்தபோது தடுத்ததால் பாரூர் காவல் நிலையத்தில் 1–ம் பிரதிவாதி மீது வாதி புகார் கொடுத்ததில் பிரதிவாதி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் உள்ளூர் வாசிகள் என்பதால் நாமக்கல்லிருந்து தாவா சொத்தை அனுபவம் செய்வதாலும் பிரதிவாதிகளின் செய்கையை நீதிமன்ற உத்தரவின்றி வாதியால் தடை செய்ய முடியாது என்பதால் வாதி போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.74/2019 என வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில், வாதி ஊரில் இல்லாத நேரம் பார்த்து பிரதிவாதிகள் கடந்த 10.01.2020 தேதியில் வாதி வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி நழைந்து வாதி வீட்டை ஆக்கிரமிப்பு செய்து விட்டதாக வாதியின் மனைவி பாரூர் காவல் நிலையத்திற்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியும் காவல் நிலையத்தார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் மேற்படி போச்சம்பள்ளி மாவட்ட உரிமையில்

நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கினை பொருத்து மேற்கொண்டு தொடர்ந்து அதே பரிகாரத்திற்காக நடத்த முடியாது என்பதாலும், தாவா சொத்திலிருந்து பிரதிவாதிகளை சட்டப்படியாக வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை வாதிக்கு ஏற்பட்டுள்ளதால் போச்சம்பள்ளி மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த OS.No.74/2019 in I.A.No.3/2020 என அதே வழக்குமூலத்தில் புதியதாக வழக்கு தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு I.A.No.3/2020ல் கடந்த 16.12.2024 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மேற்படி உத்தரவு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் புதிய வழக்கு தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தான் வாதி இந்த தாவா சொத்துக்கள் முழுவதும் வாதிக்கே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரியும், அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகளின் சுவாதீனத்திலிருந்து வரும் தாவா சொத்தினை வாதிக்கு சுவாதீனம் வழங்க செயலுறுத்துக்கட்டளை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அமீனா மூலம் வாதிக்கு சுவாதீனம் கிடைக்க வழிவகை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரியவருகிறது.

9. வா.சா.1 சாட்சியத்தின் சான்றாவணங்களை பரிசீலிக்கையில், வா.சா.ஆ.1 கோகுலகண்ணன் என்பவரிடமிருந்து வாதி மதியழகன் 17.04.2017ம் தேதி பெண்டறஅள்ளி–2 கிராம சர்வே எண் 545/1 நன்செய் ஹெக்டர் 0.41.0க்கு ஏக்கர் 1.02 தீர்வை 9.25 இதில் தென்

பெண்ணை ஆற்றுக்கு போகும் ரோட்டுக்கு தெற்கு, கே.ஆர்.மாதேஷ்குமார் பாக மனைக்கு கிழக்கு, வடக்கு, தாண்டவன் மற்றும் பழனியம்மாள் பாகமனைகளுக்கு மேற்கு, இதன் மத்தியில் கிழமேல் இருபுறமும் 26 அடி, தென்டல் இருபுறமும் 50 அடி, ஆக 1300 சதுரடி அல்லது 120.77 சதுர மீட்டர் காலி மனையும், இதில் சுமார் ஏழு வருடத்துக்கு முன் செங்கல் மற்றும் சிமெண்ட் இவைகளில் கட்டப்பட்ட ஆர்.சி.சி.வீட்டின் பூரா பாத்தியமும் வாதி கோகுலகண்ணன் என்பவரிடமிருந்து கிரையமாக வாங்கப்பட்டது என தெரியவருகிறது. வா.சா.ஆ.2 ஆவணமானது 1–ம் பிரதிவாதி தமிழ்செல்வியிடமிருந்து ஒரு கோகுலகண்ணன் என்பவர் 11.01.2012ம் தேதி கிரையம் பெற்றார் என்பது இந்த ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. வா.சா.ஆ.3 ஆவணமானது ஆவண எண்.66/2009 ஒரு ரூபாவதி என்பவரிடமிருந்து பி.வா.சா.1 தமிழ்செல்வி வாங்கப்பட்ட காலி மனை கிரைய பத்திரம் செய்து கொண்டது என தெரியவருகிறது. வா.சா.ஆ.4 ஆவணமானது வாதி மதியழகன் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.1086 என தெரியவருகிறது. வா.சா.ஆ.5 ஆவணமானது வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) என தெரியவருகிறது. வா.சா.ஆ.6 ஆவணமானது வாதி பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கான போச்சம்பள்ளி மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் உத்தரவு நகல் என தெரியவருகிறது. வா.சா.ஆ.7 ஆவணமானது வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட பட்டா எண்.1086 கணினி சிட்டாவின் மூலம்

தெரியவருகிறது. வா.சா.ஆ.8 ஆவணமானது சர்வே எண் 545/1பிக்கான சொத்து வழிகாட்டி மதிப்பு என தெரியவருகிறது.

10 எனவே வாதி மதியழகன் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாவா சர்வே எண் 545/1பில் உள்ள சொத்து கோகுலகண்ணன் என்பவரிடமிருந்து வாதி மதியழகன் கிரையம் பெற்றார் என்பது தெளிவாக தெரியவருகிறது. எனவே வாதிக்கு பாத்தியப்பட்டதாக கூறி வாதியின் அனுபவத்தில் இருந்துள்ளதாகவும், அச்சொத்துக்களை சுவாதீனம் ஒப்படைக்க வேண்டியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வழக்கில் 1300 சதுரடி அல்லது 120.7 சதுர மீட்டர் காலி மனையும், இதில் கட்டப்பட்ட ஆர்.சி.சி வீடு சொத்தினை பொறுத்து வாதிக்கு விளம்புகை பரிகாரம், சுவாதீன பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி வழக்கின் சொத்து விவரம் ஆய்வு செய்கையில் அவ்வழக்கு சொத்தின் விவரம் பெண்டறஅள்ளி–2 கிராம சர்வே எண் 545/1 நன்செய் ஹெக்டர் 0.41.0–க்கு ஏக்கர் 1.02 தீர்வை 9.25 இதில் தென் பெண்ணை ஆற்றுக்கு போகும் ரோட்டுக்கு தெற்கு, கே.ஆர்.மாதேஷ்குமார் பாக மனைக்கு கிழக்கு, வடக்கு, தாண்டவன் மற்றும் பழனியம்மாள் பாகமனைகளுக்கு மேற்கு, இதன் மத்தியில் கிழமேல் இருபுறமும் 26 அடி, தென்டல் இருபுறமும் 50 அடி, ஆக 1300 சதுரடி அல்லது 120.77 சதுர மீட்டர் காலி மனையும், இதில் சுமார் ஏழு வருடத்துக்கு முன் செங்கல் மற்றும் சிமெண்ட் இவைகளில் கட்டப்பட்ட ஆர்.சி.சி.வீட்டின் பூரா பாத்தியமும் வாதி கோகுலகண்ணன்

என்பவரிடமிருந்து கிரையமாக வாங்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது அறிய முடிகிறது. எனவே தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும் வாதிக்கு செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என்று இவ்வழக்கின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

11. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளனர். எனவே தாவாவில் சொல்லியுள்ள பொருன்மைகளையும் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும் பொய் என பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்க முன் வராதநிலையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g) ன் கீழ் எதிரிடை அனுமானம் எடுக்கப்படுகின்றது.

இறுதியாக, விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், பிரதிவாதிகள் இன்றிலிருந்து 3 மாத காலத்திற்குள் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க வேண்டி சுவாதீன பரிகாரம் வழங்கியும், தவறும் பட்சத்தில் வாதி நிறைவேற்று மனு தாக்கல் செய்து சவாதீனம் பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA V R Digitally signed by LATHA V R Date: 2026.03.12 18:46:58 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி
கிருஷ்ணகிரி.

**இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சிகள்:**

1. வா.சா.1. – திரு. மதியழகன்
2. வா.சா.2 – திரு. மாரப்பன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.04.2017 | தேதியிட்ட வாதியின் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்.367/2017– சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 11.01.2012 | தேதியிட்ட கோகுலகண்ணன் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் ஆவண எண்.108/2012 – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 28.01.2009 | தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்.66/2009– சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 24.11.2017 | தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பட்டா எண்.1086 – கணினி சிட்டா நகல் |
| வா.சா.ஆ.5 | 11.01.2025 மற்றும் 12.03.2024 | தேதிகளில் வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது 2 எண்ணிக்கை– அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.6 | 23.11.2017– 2017 | தேதியிட்ட வாதி பெயரில் தாவா சொத்திற்கு ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு – வளைதல நகல் |
| வா.சா.ஆ.7 | 11.01.2025 | தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தாவா சொத்திற்கு ஏற்பட்ட பட்டா எண்.1086– கணினி சிட்டா நகல் |
| வா.சா.ஆ.8 | – | தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு – கணினி பதிவிறக்க நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

LATHA V R

Digitally signed by LATHA V R
Date: 2026.03.12 18:47:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி
கிருஷ்ணகிரி.